ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராயநம:

# ஆர்ய தர்மம்.

त्यक्त्वा गृहे रतिमधोगतिहेतुभूतामात्मेच्छयोपनिषदर्थरसं पिबन्तः ।
वीतस्पृहा विषयभोगपदे विरक्ताः धन्याश्चरन्ति विजनेषु विरक्तसङ्गाः ॥

ത്യക്ത്വാഗൃഹേ രതിമധോഗതിഹേതുഭൂതാമാത്മേച്ഛയോ
പനിഷദര്ഥരസം പിബന്തഃ। വീതസ്പൃഹാ വിഷയഭോഗപദേ
വിരക്താഃ ധന്യാശ്ചരന്തി വിജനേഷു വിരക്തസങ്ഗാഃ। ധന്യാ 3

சிலமஹான்கள்— துக்கங்களின் கூட்டமே, உருவெடுத்து வந்ததுபோலும்; தற்காலமிருக்கும். நிலைமையிலிருந்தும், மிகவும் தாழ்ந்ததாயும் அதிகதுக்கத்திற்குக் காரணமான ஜன்மாவைக் கொடுக்கக்கூடியதுமான கிருஹமெனப் பெயர்வாய்ந்த ஸம்ஸாரத்தில். விருப்பத்தையடையாமல்- விஷயபோகமென்னும் ஸ்தானத்தில். அற்பங்கூட இச்சையில்லாதவர்களாயும் விவேகமற்ற ஜனங்களால் விரும்பப்படும் துச்சமான ஸகலபோகங்களிலும் வெறுப்பையடைந்து பரவைராக்யத்தைப் பெற்று ஆன்மஸ்வரூபமென்கிற அமுதத்தை அருந்தவேண்டுமென்கிற அவாவின் மேலீட்டால் வேதங்களுடைய ஸாரமாய்விளங்கும் உபநிடதங்களின் சிறந்த ரஸத்தை எப்பொழுதும் பானம் செய்துகொண்டு ஏகாந்தமானஸ்தானத்தில் ஸாதுக்களுடைய சேர்க்கையைப்பெற்று சுகமாய்ஸஞ்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள் தான் தன்யர்கள்.

எப்பொழுதும் அளவில்லாத கஷ்டங்களுக்குக் காரணமாயிருக்கும் இந்தஸம்ஸாரஸுகத்தைப் பெரிதாகக்கருதுவது மிகவும் பேதமையேயாகும்— அறிவின்மையால் ஒருவன் கருதினாலும் அவனை இழிவான ஜன்மாவைப்பெறும்படி செய்துவிடும். ஆகையால் அப்பற்றுதலை அடியோடுநீக்கி நித்யானந்தஸுகத்தைப் பெறவேண்டி, ஸத்குருமுகமாக வேதாந்த விசாரம்செய்து அந்த ரஸத்தையருந்துவதே இம்மானிடப்பிறவிக்கு முக்கியமானபயன் என்பது இதன்கருத்தாகும். சுபம்.

உபபத்திராதிபர்,

# ஆர்ய தர்மம்.

பிரபவ௵ ஆடி-௴ ௧௨

## கலிகால தர்மோபதேஷ்டாக்கள்.

(௩௯௦-வது பக்கத் தொடர்ச்சி)

லோகோபகாரமாக தர்மங்களை வெளியிடமுன்வந்து ஸ்மிருதிகளைஇயற்றிய மஹான்களான மஹரிஷிகளால்அறிவிக்கப் படாதவிஷயத்தைச்சிலர்தம் ஸூக்ஷ்மபுத்தியால் கண்டுபிடித்துப் பிறருக்குமுபதேசிக்க முன்வருகிறார்கள். அந்தோ ஸ்மிருதிகள் யாவும் எந்தயுகத்திலும் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்களைப் பொதுவாய் வெளியிடவந்தனவேயல்லாமல் கலியுகத்திற் கல்லவேன்பதுதவறென்பதை வெளியிடவேண்டியே கலியுகத்தில் சிலதர்மங்கள் அனுஷ்டிக்கக் கூடாதென்று துவக்கி அவைகளையும் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள். இந்தஸ்மிருதிகள் கலியுகத்தின் தர்மானுஷ்டானத்திற்காக ஏற்படவில்லை என்றால் கலியுகத்தில் இந்ததர்மங்களைச்செய்யாதே என்று கூறுவதற்கு இந்தஸ்மிருதிகள் எப்படி முன்வரலாம் ஆகையால் ஸ்மிருதிகள் எல்லாயுகங்களிலும் அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களை ஸாமான்யமாக வெளியிடவந்தனவென்றும் கலியுகத்தில் சிலதர்மங்களை விலக்கவேண்டுமென்று தெரியாமல் அனுஷ்டித்து வருவார்கள் என்று கருதி அவைகளை மாத்திரம் நாமேவிலக்கிக் காட்டவேண்டுமென்று முன்வந்திருப்பதால் இக்காலத்திலும் இந்தஸ்மிருதிகளில் கூறியபடியே அவரவர்களுக்குற்ற தர்மங்களை அவசியம் அனுஷ்டித்தே தீரவேண்டுமென்று ஸ்பஷ்டமாய் விளங்கவில்லையா! இவ்விதமிருக்கும் ஸ்மிருதிகளின் கருத்தை சற்றும் உற்றுநோக்காமல் இக்காலத்திற்கு இந்தஸ்மிருதிகள்எழுதப்படவில்லைஎன்றும் காலத்தையனுஸரித்து நம்ஸௌகர்யம்போல் தர்மவியவஸ்தைகளை மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும் தைர்யமாய் கூறமுன் வருவது எவ்வளவு அறியாமையாகும், தமக்கிருக்கும் அக்ஞானத்தை அற்பமும் அறிந்துகொள்ளாமல் பிறருக்கும் தர்மோபதேசம் செய்கிறார்கள். அந்தோ கலியின் கொடுமை நம் ஸநாதநதர்மத்தைப் பூராவும் மாற்றி எவ்வளவு சிக்கிரத்தில் அதர்மத்தை உலகெங்கும் பாவும் படி செய்ய முடியுமோ அவ்விதம் முயற்சிக்கின்றார்கள்.

1. விதவாவிவாகம், 2. ருதுமதிவிவாகம். 3. தீண்டாமை ஒழிப்பது. 4. சம்மதவயது மசோதா. 5. ஜாதிபேதம் குணகர்மாக் களாலேயேயன்றி பிறப்பாலில்லை. 6. கீழ்ஜாதியிலிருப்பவர்களை மேல் ஜாதிக்கிஎற்றுவது முதலான பலவித அதர்மங்களை ஸ்தாபித்து ஜகத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே அவர்களின் நோக்கமாகும். உலகத்திலுள்ள ஜனங்களின் கஷ்டங்களைப் போக்கி அவர்களுக்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணவேண்டு மென்பதில் நமக்கும் ஆக்ஷேபமில்லை அது அவச்யம் செய்ய வேண்டியகாரியமே. அதற்கு இவர்கள் கூறும் வழி சரியல்ல. ஒரு மனிதனுக்கு ஒரு ரோகமேற்பட்டால் அது எற்பட்டதற்கு என்னகாரணம் எந்த தாதுவின் தோஷத்தால் இந்த ரோகமுண்டாயிருக்கிறது அந்தகாது என் தோஷமுள்ளதாக ஆயிற்று என்கிற இவைபோன்ற மூலகாரணங்களை நன்கறிந்து எந்த ஔஷதத்தைக் கொடுத்தால் இந்ததாதுவிலிருக்கும் தோஷம் விலகி வியாதி நிவிருத்தியடையும் என்று நன்ருய் ஆலோசனை செய்து சிறந்த ஔடதத்தைக் கொடுத்தால் வியாதி விலகுமேயல்லாமல் ஒன்றையும் கவனியாமல் தமக்குத் தோன்றியபடி தற்காலம்ரோகிக்கிருக்கும் கஷ்டத்தைக்காட்டிலும் அதிககஷ்டத்தைக்கொடுக்கும்படியான கெட்டமருந்துகளைக்கொடுத்தால் அவனுக்கு ரோகம் நிவர்த்தி யாகாமலிருப்பதோடு அதிககஷ்டமும் எப்படிஎற்படுமோ அவ்விதம் இவர்களால் செய்யப்படும் வைதீக தர்ம சம்மந்தமானஸகல காரியங்களும் இன்றும் அதிகஷ்டத்திற்குக் காரணமாகுமேயன்றி தற்காலம் இருக்கும் கஷ்டத்தோடு மாத்திரம் நிற்காது என்பதுதிண்ணம்.

द्यूतं पानं च चौर्यं च परस्त्री रतिरज्ञता ।
एकैकमप्यनर्थाय वाच्यं किं मिळितानिचेत् ॥

த்யூதம் பாநம் ச சௌர்யம் ச பரஸ்த்ரீ ரதிரஜ்ஞதா ।
ஏகைகமப்யநர்தாய வாச்யம் கிம் மிளிதாநிசேத் ॥

சூதாடுவது கட்குடிப்பது திருடுவது பரஸ்திரீயிடம் ஆசைகொள்வது அறிவின்மை. இவைகளில் ஒவ்வொன்றும் கஷ்டத்தையுண்டுபண்ணும். இவ்வைந்தும் சேர்ந்திருப்பின் சொல்லவேண்டியதில்லை என்று ஒரு பெரியார் கூறியுள்ளார்.

உபபத்திராதிபர்

4-08

# பொன்மலையில் பிரம்மஸ்ரீ போலகம்சுந்திரசாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்டுவருகிற பகவத் கீதா உபந்யாஸத்தின் சுருக்கம்.

(400-வது பக்கத்தொடர்ச்சி)

சு. 23. தேவதைகளை யக்ஞாதி கிருதுக்களால் பூஜிக்கிறவர்கள் தேவதைகளை அடைகிறார்கள். அற்பபுத்தியுள்ள அவர்களுடைய அந்த தேவதாபூஜையினால் அடையப்படும் பலன் முடிவையுடையதாகவே இருக்கிறது. ஆனால் என்னுடைய பக்தர்களோ என்னையே நேரில் உபாஸிக்கிறபடியால் என்னையே அடைகிறார்கள். அதுதான் சாச்வதமான பலன்.

சு. 24. ஏன் அவர்கள் என்னை பஜிக்கிறதில்லையெனில் என்னை ஸரியாகத் தெரிந்துகொள்ளாததுதான் காரணம். நாசமற்றதும் ஸர்வோத்தமமும உலக விலக்ஷணமுமான என் ஸ்வரூபத்தையறியாது, அவிவேகிகள் இதற்குமுன் இல்லாமல் இப்போது யதுகுலத்தில் உண்டாகி மநுஷ்யரூபமாய் இருக்கிறதாகத் தெரிந்துகொள்கிறார்கள்.

சு. 25. ஏனெனில் என் ஸங்கல்ப்பத்திற்கு அதீனமான மாயையால் மறைக்கப்பட்டிருக்கிற நான் எல்லோருக்கும் காணப்படுகிறதில்லை. மூடர்கள் என்னை பிறப்பற்றவனாகவும் நாசமற்றவனாகவும் அறிகிறதில்லை.

சு. 26. அர்ஜுனா சென்றுபோன இருக்கிற வரப்போகிற முக்காலப் பிரபஞ்சங்களை நான் தெரிந்துகொள்ளுகிறேன். என்னைத் தெரிந்துகொள்ளுகிறவர்கள் ஒருவருமில்லை.

சு. 27. தேகத்தை யடையும்போதே துவந்துவமாகிற காமக்குரோத ராகத்துவேஷாதிகளின் மோக்ஷத்தால் ஸகலப்ராணிகளும் விஷயாபிமானத்தை அடைவதினால் என்னைத் தெரிந்து கொள்ளுகிறதில்லை,

சு. 28. அப்படிப்பட்ட பாபராசிகள் நிவர்த்தியடைந்த பிறகு புண்ணியசாலிகளான ஜனங்கள் துவந்துவமோஹத்தில் இருந்து விடுபட்டு திருடமானவிருதத்தையுடையவர்களாய் என்னையே பஜிக்கிறார்கள். அதாவது என்னையே அடைகிறார்கள்.

(அர்ஜுனன் இன்னும் சில ப்ரச்னங்களைக் கேழ்க்கும் பொருட்டு கடைசி இரண்டு சுலோகங்களை ஸ்ரீபகவான் வெளியிடுகிறார்.)

சு. 29. யார் என்னை ஆச்ரயித்து கிழத்தனத்தையும் மாணத்தையும் நிவர்த்தித்துக்கொள்ளும்பொருட்டு பிரயாசை எடுத்துக்கொள்கிறார்களோ அவர்கள் பிரம்மத்தையும் சகலவித அத்யாத்மத்தையும் கருமத்தையும் அறிகிறார்கள்.

சு. 30. எவர்கள் அதிபூத, அதிதெய்வ, அதியக்ஞத்துடன்கூடிய என்னை அறிகிறார்களோ அவர்கள் மாணகாலத்திலும் என்னிடத்தில் மனதை வைத்தவர்களாய் என்னை அறிகிறார்கள்.

வி. என். ராமனாதன்.

---

# தீண்டாமைக்கு முடிவுகாலம்.

398-வது பக்கதுடர்ச்சி.

கலிக்கு ஓர் விசேஷகுணமுண்டு. விசேஷமாய் பிராமணன் ருத்திரனான ஈசனை சரணமடைவதே. கலியின் பாபத்தைப்போக்கும். ராமகீர்த்தனத்தைச்செய்யாதவரையில்தான் பாபமும் பயமும் உண்டாகும். ராமநாமம்தான் தாபத்திரயத்தையும் விலக்கும். மனிதனுக்கு இக்கலியில் மனச்சுத்தி கிடையாது. நல்ல பொருள் கிடையாது. ஆகையால் ஸத்யம் ஒன்றே மனிதர்களுக்கு உபகாரமாய் உளது என்று இவ்விதமெல்லாம் சுலபமான தர்மத்தைக் கூறியும் இவைகளையும்செய்யமுடியவில்லை என்று ஒருவன் சொன்னால் இதற்குப் பரிகாரமுண்டோ. இனி இக்கலியில் விலக்க வேண்டிய முக்கிய விஷயங்களைக் கூறுவோம்.

## கலியுகத்தில் விலக்கப்பட்ட தர்மங்கள்.

இதை இங்கு கூறுதல் இக்காலத்துக்கும் இப்போதியவர்களுக்கும் மிகத்தகுதியுள்ளது. ஆகையால் முதலில் இதற்கு ஏற்பட்டுள்ள சுலோகங்களை முற்றிலும் கூறிவிட்டுப் பிறகு அதன் கருத்தையும் விளக்குவாம்.

पराशरमाधवीये—

ऊढायाः पुनरुद्वाहं ज्येष्ठांशं गोवधं तथा ।
कलौ पञ्च नकुर्वीत भ्रातृजायां कमण्डलुम् ॥
देवरेण सुतोत्पत्तिर्वानप्रस्थपरिग्रहः ।
दत्ताक्षतायाः कन्यायाः पुनर्दानं परस्य च ॥
समुद्रयात्रास्वीकारः कमण्डलुविधारणम् ।
महाप्रस्थानगमनं गोपशुश्च सुराग्रहः ॥
अग्निहोत्रहवण्याश्च लीढालीढ्यपरिग्रहः ।
असवर्णासु कन्यासु विवाहश्च द्विजातिषु ॥
वृत्तस्वाध्याय सापेक्षमघसङ्कोचनं तथा ।
अस्थिसञ्चयनादूर्ध्वमङ्गस्पर्शनमेव च ॥
प्रायश्चित्तविधानं च विप्राणां मरणान्तिकम् ।
संसर्गदोषः पापेषु मधुपर्के पशोर्वधः ॥
दत्तौरसेतरेषां तु पुत्रत्वेन परिग्रहः ।
शामित्रं चैव मित्राणां सोमविक्रयणं तथा ॥
दीर्घकालब्रह्मचर्यं नरमेधाश्वमेधकौ ।
कलौ युगेत्विमान् सर्वान् वर्ज्यानाहुर्मनीषिणः ॥

பராஶரமாதவீயே—

ஊடாயா: புநருத்வாஹம் ஜ்யேஷ்டாம்ஶம் கோவதம் ததா ।
கலௌ பஞ்ச நகுர்வீத ப்ராத்ருஜாயாம் கமண்டலும் ॥
தேவரேண ஸுதோத்பத்திர்வாநப்ரஸ்தபரிக்ரஹ: ।
தத்தாக்ஷதாயா: கந்யாயா: புநர்தாநம் பரஸ்ய ச ॥
ஸமுத்ரயாத்ராஸ்வீகார: கமண்டலுவிதாரணம் ।
மஹாப்ரஸ்தாநகமநம் கோபஶுஶ்ச ஸுராக்ரஹ: ॥
அக்நிஹோத்ரஹவண்யாஶ்ச லீடாலீட்யபரிக்ரஹ: ।
அஸவர்ணாஸு கந்யாஸு விவாஹஶ்ச த்விஜாதிஷு ॥
வ்ருத்தஸ்வாத்யாயஸாபேக்ஷமகஸங்கோசநம் ததா ।
அஸ்திஸஞ்சயநாதூர்த்வமங்கஸ்பர்ஶநமேவ ச ॥

ப்ராயஶ்சித்தவிதாநஞ்ச விப்ராணாம் மரணாந்திகம் ।
ஸம்ஸர்கதோஷ: பாபேஷு மதுபர்கே பஶோர்வத: ॥
தத்தௌரஸேதரேஷாம் து புத்ரத்வேந பரிக்ரஹ: ।
ஶாமித்ரம் சைவ விப்ராணாம் ஸோமவிக்ரயணம் ததா ॥
தீர்ககாலம் ப்ரஹ்மசர்யம் நரமேதாஶ்வமேதகௌ ।
கலௌ யுகே த்விமாந் தர்மாந் வர்ஜ்யாநாஹுர்மநீஷிண: ॥

1. பெண்களுக்கு மறுமணம் செய்வித்தல். 2. மூத்தகுமாரனுக்கு அதிக பாகம் கொடுத்தல். 3. பசுவை வதைத்தல். 4. ஸகோதரன் மனைவியைப்புணர்தல். 5. ஸன்னியாஸம் செய்துகொள்ளல். இவ்வைந்தையும் கலியில் செய்தல் கூடாதென்கிறார். இதனால் இவ்வைந்தும் முன்யுகங்களில் அநுஷ்டானத்திலிருந்ததென்றாகிறது. ஆனால் நிச்சயமாய் அனுஷ்டிக்கத்தான் வேண்டுமென்ற நிர்ப்பந்தமல்ல. ஆசை உண்டானால் தேசம் காலம் ஒத்திருந்தால் அவ்விதம் செய்யாவிடில் கெடுதலும் குறைவும் பலவேற்படுமென்றிருந்தால் அப்போது அனுஷ்டிக்கப்பட்டதாய் இருந்ததென்று தெரிகிறது. இதையே அடுத்த சுலோகததில் விளக்கிக் காட்டுகிறார். புருஷன் இறந்தபின் கொழுனனால் புத்திரனைப் பெறுதல். 6. வானப்ரஸ்த ஆச்ரமம் ஸ்வீகரிததல். முதலில் கொடுபட்டு அவள் ப்ரௌடையாகாதிருக்கும்போது புருஷன் மரித்துவிட்டால் அவளைப் பிறனுக்கு மணம புரிந்துவைப்பது. 7. ஸமுத்திரயாத்திரை செய்தல். கமண்டலு தரித்தல், 8. மகாப்ரஸ்தானம் செல்லுதல். பசுவை வைத்து யாகம் புரிதல். 9. ஸுராபானம் செய்தல். 10. அக்னிஹோத்திர ஹவனியென்ற பாத்திரவிசேஷத்தில் நாக்கினால் நக்கிச் சாப்பிடுதல். 11. அன்யஜாதிகளிலும் பிராமணன்முதலியவர்கள் மணம் செய்தல். 12. ஸதாசாரம் அத்யயனம் இவைகளுக்காக ஆசௌசத்தைக் குறைத்தல். 13. ஸஞ்சயனம் என்கிற இரண்டாம்நாள் அல்லது நான்காம்நாள் ப்ரேதகார்யம் முடிந்தபிறகு கர்த்தாவோடு தொட்டுப்பழகல். 14. பிராமணர்களுக்கு மரணாந்த தண்டனை விதித்தல். 15. பாபிகளுடன் சேர்நததால் தோஷமுண்டென்பதும். 16. மதுபர்க்கத்திற்காகப் பசுவை வதைத்தலும். 17. ஸ்வீகாரமாய்வந்தவன் சொந்தப்பிள்ளை இவர்களைத்தவிர மற்றவர்களைப் பிள்ளையாய்ப் பேணுதலும். 18. பிராமணர்கள் பசுவிசஸனம் செய்தலும், 19. ஸோமவிக்கிரயம் செய்தலும். 20. நீண்டகாலம்

பிர்மசாரியாய் இருத்தலும். 21. நரயாகம் செய்தலும். 22. அசுவமேதம் செய்தலும் ஆகிய 22 கார்யங்கள் இக்கலியில் விலக்கப்பட்டன. இவைகளில் இரண்டொன்று இச்சையாலுண்டாவதென்றும் மற்றவை அவசியம் விலக்கத்தக்கவைதான் என்றும் கொள்ளவேண்டும். இரண்டொன்று நிந்திக்கத் தக்கதென்று முதலிற்கூறப்படினும் பின்னால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாய் ஆகின்றன. அவைகளைக் கிரமமாய் ஆராய்ச்சி செய்வாம்.

இங்கு முதலாவதாய் பெண்களுக்கு மறுமணம் செய்வித்தலென்பதைக் கவனிப்பாம். இங்கு நம் தமிழில் மணமென விவாகத்திற்குப்பெயரிட்டது பொருத்தமுடையதே பாருங்கள். பெண்களுக்கு இயற்கையாய் மணம் ஏற்படவேண்டியதே மணந்தரும். மறுபடி மணமென்பது மணமாகநேராதென்பதுதான் விளங்குகிறது. முதல்மணமே மணம். மறுமணம் நன்றாய் இராதுதான். இதிருக்கட்டும். இம்மறுமணமென்பது முன்யுகங்களில் விருப்பமாயின் நேரலாமென்று அனுக்ஞை கொடுத்திருக்கிறதேயன்றிக் கட்டாயமாய் விதிக்கவில்லை. ஆதல்பற்றியே முற்காலத்தில் விவாகம் அவ்விதம் செய்துகொண்டார்கள் என்று உதாரணமாய் ஒருவரைக்கூடக் கூறவில்லை. இக்காலத்திய நவீன மேதாவிகள் பரிஷ்காரம் செய்யத்தலைப்பட்டு மறுவிவாகத்திற்கு வேதத்திற் பிரமாணம் கூறியிருக்கிறதென்று தலைவிரித்துக் கூத்தாடுகிறார்கள். இவர்களிடம் வேதத்தில் பிரமாணமிருக்கிறதா இல்லையாவென்று யார் கேட்டார். எதற்காக வேதப்பிரமாணமிருக்கிறதென்று கால்கள் ஒடியத் தலையில் இடிபடக் கூத்தாடவேண்டும். நாம் வேதத்தில் இருக்கிற விதிகளை எவ்விதம் அனுஷ்டிக்கிறோம். எவவிதம் விலக்குகிறோம். நேராக வேதத்தைப் பார்த்து ஓர் அனுஷ்டானம் கூட நாம் செய்யவில்லை. வேதமென்னும் பெருங்கடலை நாம் கண்கூடாய் தரிசிக்கவே முடியாது. மற்று நம்முன்னோர்களான மகரிஷிகள் அவ்வேதராசியைச் சிவனருளாலடைந்து அதைத் திவலை திவலையாய் எடுத்து இந்திரனை ஆராதிக்க இம்மந்திரத்தைச் சொல். வருணனை அழைக்க இது மந்திரம். வாயுவை வசம்செய்ய இதை உபயோகி. தீர்க்காயுளும் புத்திரஸந்தானமும் பாக்யமும் பெருக இம்மந்திரங்களால் துதி என்றெல்லாம் ஒரு எழுத்து 2, 4 இவ்விதமெல்லாம் துணுக்குத்துணுக்காய் நம் கையில்கொடுத்து உபயோகிக்கச்சொன்ன ஆக்ஞைப்பிரகாரம் இது மகரிஷியின் கட்டளை,

இது வேதமந்திரமென்று பயபக்தியுடன் அனுஷ்டித்து நம் முன்னோர்கள் ஸித்திபெற்றபடி நாமும் அனுஷ்டிக்கிறோமே தவிர வேதம் என்னசொல்கிறதென்ற கேள்வியே நமக்குப் பிறக்கவில்லை. ஆகவே வேதப்ரமாணமிருக்கிறது என்று கூத்தாடினால் அதற்குப்பலன் நான் முன்கூறியதுதான் கைகண்ட பலனேதவிர வேறல்ல. நம் ஸ்மிருதிபுராணம்தான் யாதுகூறுகிறதென்று பார்ப்போம். அங்கும் இம்மறுமணத்தை ஏற்றுக்கொள்ளவே இல்லை. விவாகத்தில் தானமென்பது மூன்றுவிதம். மனோதானம், வாக்தானம், க்ரியாதானம் என்று. முதலில் மனதால் இந்த வரனுக்கு நமது கன்னியைக் கொடுத்துவிடுவதென நிச்சயித்தல், இரண்டாவது அதை வாக்கால் சபையில் நிச்சயித்தல். பிறகு வைதிக க்ரியையின் மூலம் தானம் ஏற்படுதல். இதைத்தான் நிச்சயதானம் என்றும் இதன்பிறகு மாற்றமுடியாதென்றும் மற்ற இரண்டையும் மாற்றிவிடலாமென்றும் சொல்கிறார்கள். நாம் அனுஷ்டானத்திலும் அவ்விதம் கண்டிருக்கிறோம். ஆனால் ஸாவித்ரீ சரிதத்தை கவனித்தால் அந்த இரண்டு தானத்திற்கும் மகிமை உண்டென்றேற்படுகிறது. அங்கு ஸத்தியவானை ஸாவித்ரிக்கு விவாகம் செய்துகொடுப்பதாய்வாக்கால் நிச்சயம் செய்தபிறகு நாரதர் முகமாய் ஸத்தியவான் அல்ப ஆயுளுள்ளவனென்று தெரிந்து கொண்டு அரசன் தன் புத்திரியான ஸாவித்திரியை அழைதது உள்ளதைச் சொல்ல அவள் ஆனால் அக்காலத்தில் எவ்விதமாவது கணவனது அல்ப ஆயுளைநிவர்த்தி செய்து விடலாமென்று எண்ணியிருப்பாளென்று யாராவது சொல்லமுடியுமா. முடியாது. மற்று ஏதோ இச்சன்மத்தில் நமக்குக் கிடைத்த பாக்கியம் இவ்வளவுதான் சாஸ்திரப்படிநம் ஸௌகர்யத்தைத்திருத்தவேண்டுமே யொழிய நம் ஸௌகர்யத்திற்காக சாஸ்திரத்தை மாற்றஇயலாதென்றே நினைத்திருப்பாள். ஆகவே சாஸ்திரப்படி ஒருஸ்திரீ மறுமணம் செய்துகொள்ளமுடியாதுதானென்றேற்பட்டது. இனி சீர்திருத்தக்காரர்கள் மற்றுமொரு பிரமாணம் கூறுவர். அதாவது தமயந்தி மறுஸ்வயம்வரம் வைத்துக்கொள்ளவில்லையா. அவ்விதம் அவள் செய்ததால் மறுமணம் ஸ்திரீகளுக்கு இயற்கையாய் உண்டென்று இதைக்கவனிப்பாம். இந்தக்கதையும்இவர்களுக்குஸாதகமாகாது. உண்மையில் நெருங்கிப்பார்த்தால் தனக்கு ஸாக்ஷிசொல்ல மறுப்பதுடன் பிரதிவாதிக்கு அனுகூலமாய் அவன்கோஷ்டியில் முன்

நின்றுகொள்ளும். எவ்விதமெனில் கவனியுங்கள். தமயந்தி மறுஸ்வயம்வரம் வைத்துத் தனக்கு இன்னொரு புருஷனைத் தேடிக்கொள்ளவேண்டுமென்று நினைத்ததாய் பாரதத்தில் நளோபாக்கியானத்தில் வெளியாகிறது. மற்றும் ஸ்வயம்வரத்திற்கு வழக்கம்போல் தேச தேசங்களுக்கும் பத்திரிகை அனுப்பியதாய் தெரிகிறது. பட்டணம் அலங்கரிக்கப்பட்டதாய் வர்ணித்திருக்கிறது. காசியில் புஷ்கரராஜனுக்கு மட்டிலும் பத்திரிகையனுப்பப்பட்டதாய்த் தெரிகிறது. அப்பத்திரிகையும் யார் அனுப்பியதாய் யாரால் அனுப்பப்பட்டது என்பதை அச்சரிதத்தை முழுமையும் நாம் வாசித்துத்தான் அர்த்தம் செய்யவேண்டுமேதவிர மறுகல்யாணம் உண்டு. அதனால்தான் பத்திரிகை அனுப்பப்பட்டது. மற்றது கவனிக்கத்தக்கதல்ல. வேறு விதமாய்க்கதை இருந்தால் அது பின்னால் சேர்க்கபட்டு விட்டது என்று சொல்வது அழகா தான் கெட்டது மன்றி ஊரையும் கெடுத்தானும் என்பது போல் தான்நியாயமில்லாமல் கூறுவதை ஸ்திரப்படுத்த இதிஹாஸத்தைப் பொய்யென்றும் கூறவேண்டுமோ. இனி இக்கதையில் இவ்விதம் வெளியாகிறது. தமயந்திக்கு வேறு புருஷனைத்தேடிக்கொள்வதில் ஆசையேயில்லை. அவ்விதம் சாஸ்திரம் இல்லையென்பதும் நன்றாய்த் தெரியும் ஆனால்தன் பர்த்தா காசிராஜனிடம் இருப்பதாய் நன்கு தெரிந்துகொண்டாள். அவரைத்தருவிப்பதற்கு உபாயம் அரசனை இங்குதருவித்தால் நளன் ஸாரதியாய்வரக்கூடும். அவர்ஸாரத்தியம் செய்துவரும் ரதம்தூரத்திலேயே தெரிந்து விடுமென்று நிச்சயித்துத் தன்தகப்பன் எழுதியதுபோல் பத்திரிகை தயாரித்து 2 நாள் அவகாசம் தானிருக்கிறதென்றும் அரசர்களெல்லோரும் வந்து விட்டனர் வந்து கொண்டிருக்கின்றன ரென்றும் எழுதினாள். எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

---

# வரலக்ஷ்மி விருதம்.

நம்தேசத்தில் விளங்கும் வைதிக குடும்பங்களிலுள்ள ஸ்திரிகளில் சிலரைத்தவிர்த்து மற்றயாவரும் இந்தவிருதத்தை அனுஷ்டித்து வருகிறார்கள் என்பதைப்பலரும் அறிந்திருக்கலாம். சாஸ்திரத்தில் புருஷர்களும் இந்தவிருதத்தை யனுஷ்டிக்கலாம் அதினால்அதிகமானசிரேயஸ் உண்டாகுமென்று கூறப்பட்டிருந்தாலும்

ஆசாரத்தில் ஸ்திரீகள் மாத்திரம் தான் அனுஷ்டிப்பதாகத்தெரிகின்றது. இதை அனுஷ்டிப்பதற்குக்காலம் சிராவணசுக்லபக்ஷத்தில்வரும் வெள்ளிக்கிழமையென்று சொல்லப்பட்டிருக்கின்றது. சுக்லபக்ஷத்தில் இரண்டு மூன்று கிழமைகள் வந்தால் எந்தக்கிழமையில் அனுஷ்டிக்கிறது எல்லாக்கிழமைகளிலும் அனுஷ்டிக்கிறதா அல்லது ஏதாவதொரு கிழமையில்தானு. அப்படியானல் அது எந்தக்கிழமை, முதல் வரும்கிழமையா, இரண்டாவதா? மூன்ருவதா? என்கிற சங்கைநிகழலாம் இவ்விதம் ஸந்தேகப்படுவதற்கு இடமில்லாமல் சாஸ்திரங்களாலேயே தீர்மானம்செய்யப்பட்டிருக்கின்றது அதை அடியில் வருமாறுகாண்க

श्रावणे शुक्लपक्षेतु द्वितीये भृगुवासरे ।
संपत्व्रतं प्रकुर्वीत वरलक्ष्मीप्रसादकम् ॥ भविष्योत्तरपुराणे ।

ஶ்ராவணே ஶுக்லபக்ஷேது த்³விதீயே ப்⁴ருகு³வாஸரே ।
ஸம்பத்வ்ரதம் ப்ரகுர்வீத வரலக்ஷ்மீப்ரஸாத³கம் ॥
ப⁴விஷ்யோத்தரபுராணே ।

சிராவண சுக்கலபக்ஷத்தில் வரும் சுக்ரவாரத்தில் இரண்டாவது சுக்கிரவாரத்தில் வரலக்ஷ்மீவிரதத்தை அனுஷ்டிக்கவேண்டும் என்று பவிஷ்யோத்தர புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது

स्वप्ने लब्ध्वा व्रतं लक्ष्म्याः पूर्णिमोपान्त्यभार्गवे ।
श्रावणे शुक्लपक्षेतु कृत्वाभाग्यमवापच ॥

ஸ்வப்நே லப்³த்⁴வா வ்ரதம் லக்ஷ்ம்யா: பூர்ணிமோபாந்த்யபா⁴ர்க³வே ।
ஶ்ராவணே ஶுக்லபக்ஷேது க்ருத்வாபா⁴க்³யமவாபச ॥

காலநேமி என்கிற ஒருவர் ஸ்வப்நத்தில் இந்த லக்ஷ்மிவிரதத்தை அடைந்து சிராவண சுக்லபக்ஷத்தில் வரும் பௌர்ணமிக்கு அருகிலிருக்கும் சுக்ரவாரத்தில் பூஜித்து விசேஷமான சிரேயஸ்ஸைப்பெற்ருர் என்றும்

श्रावणे शुक्लपक्षेतु द्वितीये भृगुवासरे ।
संपत् व्रतं प्रकुर्वीत वरलक्ष्मी प्रसादकम् ॥

ஶ்ராவணே ஶுக்லபக்ஷேது த்³விதீயே ப்⁴ருகு³வாஸரே ।
ஸம்பத் வ்ரதம் ப்ரகுர்வீத வரலக்ஷ்மீப்ரஸாத³கம் ॥

சிராவண சுக்லபக்ஷத்தில் இரண்டாவது சுகரவாரத்தில் ஸம்பத்விருதம் என்று பெயர்பூண்ட இந்த வரலக்ஷ்மி விரதத்தை அனுஷ்

டிக்க வேண்டும் என்றும் விருதசூடாமணியில் சொல்லப்பட்டிருக்கின்றது. பின்னும்

श्रावणी पौर्णमास्यास्तु पूर्वस्मिन् शुक्रवासरे ।
वरलक्ष्मीव्रतं कुर्यात् सर्वसंपत्समृद्धये ॥

ஶ்ராவணீபௌர்ணமாஸ்யாஸ்து பூர்வஸ்மிந் ஶுக்ரவாஸரே
வரலக்ஷ்மீவ்ரதம் குர்யாத் ஸர்வஸம்பத்ஸம்ருத்தயே ।

சிராவண பௌர்ணமிக்கு முந்தி வருகிற சுக்ரவாரத்தில் சகல ஐசுவர்யங்களும் அதிகமாக விருத்தியடையவேண்டியதின்பொருட்டு வரலக்ஷ்மீ விரதத்தை அனுஷ்டிக்க வேணடும் என்று ஒரு புராணத்திலும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

தீக்ஷிதாவர்களால் பாடப்பட்ட ஸ்ரீவரலக்ஷ்மி என்கிற கீர்த்தனத்தின் சரணத்திலும் இந்த அபிப்பிராயத்தையே வெளியிட்டிருக்கிறார்கள்.

சென்ற ஆனி-மீ ஸ்ரீமடத்தில் நடைபெற்ற அத்வைத ஸபையில் விஜயம் செய்திருந்த பல பண்டித சிரேஷ்டர்களாலும் ஆடி-மீ 21வ தான் இந்த விரதத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்று சாஸ்திரார்த்தங்களைக் கொண்டு தீர்மானித்திருக்கிறார்கள் என்றும் கேழ்வைப்படுகிறோம்.

இங்கு கூறப்பட்ட வசனங்களின் கருத்தையும் பண்டிதர்களின் அபிப்பிராயத்தையும் கவனித்தால் இவ்வருஷம் ஆடி-மீ 21வ சுக்ரவாரத்தன்றுதான் வரலக்ஷ்மி பூஜை அனுஷ்டிக்கவேண்டுமென்று ஸ்பஷ்டமாய் வெளியாகின்றது,

இவ்விதமிருக்கும் சாஸ்திர பண்டிதர்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாய் ஆடி-மீ 7வ வெள்ளிக்கிழமை வெளிவந்த மித்திரனில் 11. ஆவது பக்கத்தில் பண்டுருட்டி பிராசீனவித்யா குருகுலத்தலைவர் என்று கையொப்பமிட்டு ஆடிமீ-28வ-வரலக்ஷ்மீவிரதம் செய்யவேண்டுமென்றும் இதற்கு ஆதாரமாக ஸ்காந்த புராணத்திலுள்ள

शुक्ले श्रावणिके मासि पूर्णिमोपान्त्यभार्गवे ।

ஶுக்லே ஶ்ராவணிகே மாஸி பூர்ணிமோபாந்த்யபார்கவே ।

என்கிற இந்தவசனத்தை எழுதி சுக்லபக்ஷத்தில் சிராவணிக மாஸத்தில் பௌர்ணமியைச் சமீபித்திருக்கும் வெள்ளிக்கிழமையில் தான் அதாவது இந்த ஆடிமீ 28வ வழக்கம்போல் வரலக்ஷ்மீவிரதம் செய்வது நம்முன்னோர்கடமையாம் என்று வெளியிட்

டிருக்கிறார். இதுதவறேயாகும். உபாந்தய பதத்திற்கு பூர்ணிமைக்கு ஸமீபத்திலிருக்கும் சுக்கிரவாரம் என்று பொருள் ஏற்படுகின்றது. இவர்கருதும் 28உ சில பஞ்சாங்கங்களில் 12. நாழிகைக்கிப்பிறகு பௌர்ணமி என்றும் சிலவைகளில் 16. நாழிகைக்கிப்பிறகு பௌர்ணமி என்றும் போடப்பட்டிருக்கின்றது. அன்று தான் பௌர்ணமியும் சுக்ரவாரமும் ஒருதினத்தில் சேர்ந்திருந்தால் அதை உபாந்தய மென்று எப்படிச்சொல்லமுடியும் அந்த சுக்ரவாரம் உபாந்தியமாகாது அதற்குப் பூர்வம் இருக்கும் சுக்கிரவாரந்தான் உபாந்தயமாகும் இக்கருத்தைக் கொண்டுதான்.

श्रावणे शुक्लपक्षेतु द्वितीये भृगुवासरे ।

ஶ்ராவணெ ஶுக்லபக்ஷேது த்விதீயெ ஭ருகுவாஸரெ ।

சிராவணசுக்லபக்ஷத்தில் இரண்டாவது சுக்ரவாரத்தில் என்று விரதசூடாமணியில் சொல்லியிருக்கிறார் பண்டுருட்டி வித்யாகுலத்தலைவர் இவ்வசனத்தைக் கவனித்திருந்தால் இவ்விதம் சொல்லியிருக்கமாட்டார். இரண்டாவது சுக்கிரவாரமென்றும் பௌர்ணமிக்குப் பூர்வம் இருக்கும் சுக்ரவாரமென்றும் ஸ்பஷ்டமாய் வசனமிருக்கும்போது அதற்குநேர்விரோதமாக மூன்றுவது சுக்கிரவாரமான 28உ என்று எப்படிக் கூறமுடியும். ஆகையால் அவர் கூறியிருப்பது சாஸ்திரவிரோதமாயிருப்பதால் அங்கீகரிக்கத்தகுந்ததல்ல, ஆடி ௴ 21உ செய்வதுதான் சாஸ்திர ஸம்மதம்

இந்த வருஷத்துப் பஞ்சாங்கங்களில் ஆடி ௴ 28உ வெள்ளிகிழமைதினம் இந்தவிரதம் போடப்பட்டிருக்கிறது. எந்த ஆதாரத்தைக்கொண்டு இவ்விதம் போட்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை அவர்கள் போட்டிருப்பதற்குச் சரியான பிரமாணம் கிடைக்காதவரையில் ஆடி ௴ 21உ தான்செய்யவேண்டுமென்று கீழ் காட்டியபிரமாண வசனங்களால் ஏற்படுகிறது.

ஆரியதர்மாபிமானிகளான பண்டிதசிகாமணிகள் பஞ்சாங்கங்களில் கூறியபடி அனுஷ்டிப்பதற்கு ஆசார பிரமாண்கித்தைத்தவிர சாஸ்திரீயமான தகுந்த பிரமாண வசனங்கள் இருந்தால் அதை தாமதமன்னியில் அடுத்தபேப்பரிலேயே வெளியிட்டு சரியானமுக்யகாலத்தில் இந்த விரதத்தை அனுஷ்டிக்கும்படி செய்து அதின்பயனை அடையும்படி உதவிபுரிய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாராயணதீக்ஷிதர்.

நேடிவ்டாக்டர். வைத்தியசாலை, முடிகோண்டான்

# யஜுர்வேதிகளின் உபாகர்மம்.

அடுத்த 7உ மித்ரனில் நிகழும் பிரபவவருஷம் யஜுர்வேதிகளுடைய உபாகர்மம் ஆகஸ்டுமீ 12உ அன்றுதான் என்று ஸ்ரீமான் விசுவநாத சிரௌதிகள் இந்துவில் சென்ற 6உ ஒருகடிதத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளார் ஆயினும் அஃது அப்படிக்கன்றும். ஏனெனில் யஜுர்வேதிகளுக்கு உபாகர்மாவின் அனுஷ்டானம் உதயவியாபகமான பௌர்ணமியில் தான் என்பது சாஸ்திரஸம்மதமாயிருப்பதை முன்னிட்டு உதயவியாபகமான பௌர்ணமியையுடைய ஆகஸ்டுமீ 13உ தான் உபாகர்மாவை அனுஷ்டிக்கும்தினம் என்பதை நம் முன்னோராகிய யஜுர்வேதிகளுக்கறிவித்துக்கொள்ளுகிறோம் என்று பண்டுருட்டிவித்யா குருகுலத்தலைவர் வரைந்துள்ளார். இதுவும் இவர் கூறியது தவறேயாகும் எப்படியென்றால்.

पर्वण्यौदायिकेकुर्युः श्रावणं तैत्तरीयकाः ।

பர்வண்யௌதயிகே குர்யு: ஶ்ராவணம் தைத்ரீயகா: ।

ஔதயிகமான பௌர்ணமியில் தைத்தரீயகர்கள் உபாகர்மாவைச்செய்யவேண்டுமென்று கார்க்யரும் கோபிலரும் வைத்தியநாததீக்ஷிதியவர்ணாச்ரம காண்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். இங்கிருக்கும் ஔதயிகம் என்கிறபதத்திற்கு உதயகாலவியாபினி என்று தீக்ஷிதரும் பொருள் கூறியிருக்கிறார். இதற்கு மேல் இந்தப்பிரகரணத்திலிருக்கும் வசனங்களையும் மற்றுமுள்ள ஸ்மிருதிகளையும் கவனிக்காமல் இந்த வசனத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு பார்த்தால் ஒரு ஸமயம் நம் வித்யாகுருகுலத் தலைவர் கூறியிருப்பது சரியாயிருக்கலாமோவென்று சந்தேகப்படலாம் இவ்விதமே மேலுள்ள விசேஷவசனங்களை கவனியாமலே இவர் இவ்விதம் வெளியிட்டிருக்கிறார் அது சரியல்ல இங்குள்ள ஔதயிக என்கிறபதத்திற்கு முந்தி உதயகால வியாபினிஎன்கிற ஸாமான்ய அர்த்தத்தைவெளியிட்டுப் பிறகு விசேஷார்த்தத்தையும் அறிவிக்கிறார்.

औदयिके संगवस्पर्श श्रुतौपर्वणिचार्भके ।

कुर्युर्नभस्युपाकर्म ऋग्यजुस्सामगाः क्रमात् ॥ तिथिदर्पणे ।

ஔதயிகே ஸங்கவஸ்பர்ஶ ஶ்ருதௌ பர்வணிசார்ப்பகே ।

குர்யுர்நபஸ்யுபாகர்ம ருக்யஜுஸ்ஸாமகா: க்ரமாத் ॥

திதிதர்பணே ।

உதயகாலவியாபினி என்று கூறியவிடத்தில் பௌர்ணமி உதயகாலம் முதல் ஸங்கமகாலம் வரையில் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் அன்றையதினம் உபாகர்மாவை அனுஷ்டிக்கலாம் என்று திதிதர்ப்பணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்று கூறிப்பிறகு இங்கு சொல்லப்பட்ட ஸங்கவபதத்திற்கு விசேஷார்த்தத்தையும் விரிக்கிறார்.

ஸங்கவஸ்பர்ச மென்றால் ஸங்கவாந்தஸ்பரிசம் என்று பொருள் ஸங்கவாந்த மென்றால் எவ்வளவு நாழிகைஎன்றால்

घटीपरिमितः कालः सङ्गवादूर्ध्वपर्वणि ।
औदयिकमितिप्राहुः मुनयस्तत्वचिन्तकाः ॥ वृद्धगार्ग्यः ।

கடீபரிமித: கால: ஸங்கவாதூர்த்வபர்வணி ।
ஔதயிகமிதிப்ராஹு: முநயஸ்தத்வசிந்தகா: ॥ வ்ருத்தகார்க்ய: ।

ஸங்கவ காலத்திற்குப் பிறகு ஒரு நாழிகை அதிகம் பௌர்ணமி எந்த தினத்தில்இருக்கிறதோ அதற்குத்தான் ஔதயிகமானபௌர்ணமி என்று இந்தவசனங்களால்மகரிஷிகள் வெளியிட்டிருக்கிறார்கள். இவ்விதம்இந்தஔதயிகசப்தார்த்தத்தைப் போதிக்கும்வசனங்கள் வர்ணாசிரம காண்டத்தில் பலவிருப்பினும் விரிவிற்கஞ்சி விடுத்தனம்.

பராசரஸம்ஹிதையில் ஔதயிகமான பௌர்ணமியில்தைத்தரீயர்கள் உபாகர்மாவைச் செய்யவேண்டுமென்று முக்கியே கூறி பிறகு ஔதயிக சப்தார்த்தத்தை விபரமாயறிவிக்கிறார்.

श्रावणी पौर्णमासीतु सङ्गवात्परतोयदि ।
तदात्वौदायिकी ग्राह्यानान्यथौदयिकीभवेत् ॥

ச்ராவணீ பௌர்ணமாஸீது ஸங்கவாத்பரதோயதி ।
ததாத்வௌதயிகீ க்ராஹ்யாநாந்யதௌதயிகீபவேத் ॥

பௌர்ணமியானது ஸங்கவகாலத்திற்கு அதாவது 12-நாழிகைக்கு மேல் இருந்தால் தான் ஔதயிகி என்று சொல்லலாம். அவ்விதமில்லாதவிடத்தில் அதற்கு ஔதயிகி என்கிற பெயரில்லைஎன்று ஸ்பஷ்டமாய் மாதவாசார்யாளால் கூறப்பட்டிருக்கின்றது.

ஸம்ஸ்கார ரத்ந மாலையில்

यदातु पूर्वदिनेमुहूर्तत्रयानन्तरं प्रवृत्ता द्वितीयदिने सङ्गवात्परतो न भवति तदा ।

श्रावणी पौर्णमासीतु सङ्गवात्परतोयदि ।
तदैवौदयिकीग्राह्या नान्यात्वौदयिकीभवेत् ॥

யதாது பூர்வேத்யுர்தினே முஹூர்த்தத்ரயாநந்தரம் பூ
ர்வா த்விதீயதினே ஸங்கவாத்பரதோ நபவதி ததா ।

ஶ்ராவணீபௌர்ணமாஸீது ஸங்கவாத்பரதோயதி ।
ததைவௌதயிகீக்ராஹ்யா நாந்யாத்வௌதயிகீபவேத் ।

எந்தஸமயத்தில் முதல்தினம் மூன்று முகூர்த்தத்திற்குப்பிறகு வந்த பௌர்ணமியானது மறுதினம் ஸங்கவகாலத்திற்குப் பிறகும் ஒரு கடிகை இல்லையோ அப்பொழுது மறுதினம் உபாகர்மம் செய்யக்கூடாதென்று இந்தவசனம் போதிக்கின்றது.

சிராவண ஸ்ரீ-ல் ஸங்கவகாலத்திற்குப் பிறகும் அற்பகாலமிருக்கும் பௌர்ணமிக்குத்தான் ஔதயிகபௌர்ணமிஎன்றுபெயர். அதுதான் உபாகர்மாவிற்கு கிரஹிக்கவேண்டும். அவ்விதமில்லாத பௌர்ணமி ஔதயிகி ஆகாது. அன்று உபாகர்மம் செய்யக்கூடாது என்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு கூறப்பட்ட பிரமாணங்களால் இந்தவருஷம் ஆடி-ஸ்ரீ 29உ சனிக்கிழமை பௌர்ணமி 10-நாழிகைக்குமேல் ஒரு பஞ்சாங்கங்களிலும் போடாதபடியால் அந்த பௌர்ணமி ஔதயிகி ஆகமாட்டாது. 12நாழிகைக்குக்குறையாமல் அதற்குமேல் கொஞ்சம் அதிகமும் இருந்தால்தான் ஔதயிகமாகும். ஆகையால் அன்று உபாகர்மாவை அனுஷ்டிப்பது சாஸ்திரியமாகாது 28உ வெள்ளிக்கிழமை தான் அனுஷ்டிக்கவேண்டும். இவ்விதமிருக்கும்சாஸ்திரங்களின்தத் வார்த்தத்தைச் சற்றும் கவனியாமல் பண்ருட்டி பண்டிதர்சாஸ்திரங்களுக்கு முறணாகக் கூறியிருக்கிறபடியால் ஆஸ்திகர்களுக்கு அவர் வசனம் பிரமாணமாகமாட்டாது. அவர் கொள்கைக்குச் சரியான ஆதாரமிருந்து வெளியிட்டால் அது ஸரியாயிருப்பின் அங்கீகரிக்க ஆக்ஷேபமில்லை. இவ்விதம் அவஸரப்பட்டு ஒரு விஷயத்தை நன்கு பராமர்சம் செய்யாமல் தோன்றியபடி எழுதி ஸாமான்ய ஜனங்களுக்கு மனக்கலக்கத்தை உண்டுபண்ணுவது பண்டிதர்களுக்கு அழகல்ல. சுபம்.

வைதிக தர்மாபிமானி.